# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.279/2025
Deposition of Witness for L.W.11 / P.W.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரேமா | | | |
| Father’s/ Husband’s Name | : | ரமேஷ் குமார் | Occupation | : | காவல் ஆய்வாளர் (நல்லூர்) |
| Village | : | நல்லூர் | | | |
| District | : | திருப்பூர் | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.08.2026**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**
**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பூர் மாநகரம் நல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024 ஆம் வருடம் ஈரோடு நகர காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 26.06.2024 ஆம் தேதி நான் ஈரோடு நகர காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது தலைமை காவலர் சாந்தி என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது புலன் விசாரணைக்காக வைத்ததை, நான் பெற்றுக் கொண்டு அன்றைய தினமே காலை 11 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் மோகன்ராஜ் மற்றும் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று பின்பு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் ரேணுகாதேவி சண்முக மூர்த்தி, கலைச்செல்வன், அசோக், சதீஷ், குருவன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். சம்பவ இட விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் ஈரோடு பெரிய வலசு கீர்த்தி பேக்கரி அருகில் உள்ள எதிரியின் தாய் மாமாவின் வீட்டின் முன்பு வைத்து மாலை

16.45 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி, ஆஜர் எதிரி யோகேஸ்– ஐ கைது செய்தேன். உரிய சட்ட விதிமுறைகளை பின்பற்றி அன்றைய தினமே ஆஜர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 27.06.2024 ஆம் தேதி வழக்கின் சாட்சிகள் சரண்யா, சாந்தி ஆகியோரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். சாட்சி சரண்யா ஆஜர் செய்த பொது நாட்குறிப்பு நகலை புலன் விசாரணைக்காக பெற்றுக் கொண்டேன். அந்த **பொது நாட்குறிப்புகள் அ.த.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே வழக்கின் சட்ட பிரிவு 294(b), 290, 353 இதச பிரிவிலிருந்து 294(b), 290, 353 510 இதச பிரிவாக மாற்றி சட்ட பிரிவு மாதிரி தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே எனது புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b), 290, 353 510 இதச கீழ் குற்ற அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் உள்ளது. ஆனால் சம்பவத்தை முற்றுகையிடும் வகையில் எந்தவிதமான கண்காணிப்பு கேமரா பதிவுகளும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடத்தில் போலீசாரால் வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை உள்ளது என்றால் சரிதான். அது தற்சமயம் வைக்கப்பட்டது. சம்பவம் நடந்த போது வைக்கப்படவில்லை. நான் சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய். மேற்படி கண்காணிப்பு கேமராக்கள் முன்னரே பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள ரேணுகாதேவி, சண்முகமூர்த்தி, கலைச்செல்வன் மற்றும் அசோக் ஆகிய நான்கு பேரும் ஒரே இடத்தில் பணிபுரிந்து வருபவர்கள் என்றால் சரியல்ல. சாட்சி அசோக் காவலர் அல்ல. இருசக்கர வாகனம் விற்பனை செய்யும் கன்சல்டிங் அலுவலர் ஆவார். அதேபோல் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள சதீஷ், குருவின், கார்த்திக் ஆகியோர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடத்திற்கு அருகில் உள்ளவர்கள் அனைவரும் போலீசாருக்கு பழக்கப்பட்டவர்கள், அனைவரும் அரசு தலைமை மருத்துவமனை காவல் நிலையத்தில் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்திருந்தால் கண்காணிப்பு கேமரா பதிவுகளை சேகரித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் காவல் துறையைச் சேர்ந்தவர் என்பதை துறையில் பணிபுரிபவர்களுக்கு ஆதரவாக எதிரி மீது சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் சொல்வது போல்

எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.